# கம்பம் நகராட்சி

**2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் (30.08.2022)-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக்கூட்டம்.**

## கூட்டப்பொருள்

| | |
|---|---|
| 1) | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 07/2022-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண். 129 பதிவுசெய்யப்பட்டது** |
| 2) | நகராட்சி பொறியாளர் அவர்களின் 07/2022-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | **தீர்மான எண். 130 பதிவுசெய்யப்பட்டது** |
| 3) | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24 -B-24-H -இன்படி அந்தந்த நகராட்சிகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபை ஏற்படுத்துவதற்கும் அதன் செயல்பாடுகள் குறித்தும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபை) விதிகள் 2022 உருவாக்கப்பட்டு அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள்.24.06.2022-இல் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி வரப்பெற்றுள்ளது. அதன்பேரில் வார்டு குழு (Ward Committee) மற்றும் பகுதி சபை(Area Sabha) குழு நிர்ணயம் செய்திடவும், குழு குறித்த செயல்பாடுகள் தெரிவித்து வரப்பெற்ற அரசாணை மற்றும் அரசிதழ் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :1) மன்றம் பதிவு செய்யலாம்.<br>2)அரசாணை வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய தொடர்நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண். 131 அனுமதிக்கப்பட்டது** |
| 4) | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 60 AW 8347 எண் கொண்ட TATA ACE - வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.40,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2)பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1479/2022/எச்1) |
| | **தீர்மான எண். 132 அனுமதிக்கப்பட்டது** |
| 5) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கிருமி நாசினியாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பிளிச்சிங்பவுடர் மற்றும் சுண்ணாம்புத்தூள் இருப்பு குறைவாக இருப்பதாலும், மழைக்காலம் தொடங்கி மழை அதிகளவில் பெய்து வருவதால் டெங்கு தடுப்பு பணியினை மேற்கொள்ளவும், மேலும், கொரோனா தடுப்பு பணிகளுக்காக மக்கும், மக்காத குப்பைகளை தரம்பிரித்து வழங்குவதற்கு தூய்மைப்பணியாளர்களுக்கு முகவுறை மற்றும் கையுறை வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.700000/- (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>1) சுண்ணாம்புத்தூள் - 15 டன்<br>2) பிளிச்சிங் பவுடர் - 6 டன்<br>3) கையுறை (Synthetic) - 1000 எண்ணம்.<br>4) முகவுறை (One Use) - 5000 எண்ணம் |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1738/2022.எச்1) |
| | **தீர்மான எண். 133 அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| 6) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுனர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் RCH பணியாளர்களுக்கு 2022-2023-ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-ற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1724/2022.எச்1) |
| | **தீர்மான எண். 134 அனுமதிக்கப்பட்டது** |
| 7) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்புப் பணியினை மேற்கொள்ளவும், மழைக்காலம் தொடங்கிமழை பெய்து வருவதால் கொசு உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்புகள் உள்ளதால் முதிர் கொசுக்களை ஒழிக்க தேவைப்படும் பைரத்திரம் மருந்து இருப்பு குறைவாக உள்ளதால் பைரத்திரம் மருந்து, டெக்னிக்கல் மாலத்தியான் மற்றும் சாக்கடைகளில் உற்பத்தியாகும் லார்வாக்களை ஒழிக்க தேவைப்படும் பேசில்லங் துருஞ்சியள்சிங் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.500000/-ற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு<br>1)பைரத்திரம் - 200 லிட்டர்<br>2) டெக்னிக்கல் மாலத்தியான் - 100 லிட்டர்<br>3) பேசில்லங் துருஞ்சியள்சிங் - 100 கிலோ |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அரசு அனுமதி பெற்ற நிறுவனத்திடம் கொள்முதல் செய்து உபயோகிக்க அனுமதிக்கலாம். (ந.க.எண்.1725/2022/எச்1) |
| | **தீர்மான எண். 135 அனுமதிக்கப்பட்டது** |
| 8) | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.TN60V 2112 வாகனத்திற்கு கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.36070/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1) ஈப்பு வாகன கிளட்ச் அசெம்பிள் செட் முழுமையாக புதியதாக மாற்றம் செய்தல்.<br>2) நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து,பேரிங் செய்தல் மற்றும் பிரேக் லைனிங் மாற்றம், வீல் அலாய்மெண்ட் ஆகிய மராமத்து பணிகள்.<br>3) A/c டாப் அப் செய்தல் 4) வாட்டர் சர்வீஸ் & ஜெனரல்செக்கப்<br>5) வைப்பர் பிளேடு -1 6) கனெக்டிங் ஸ்டாக் செட்-1 |
| | அலுவலகக்குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண். 136 அனுமதிக்கப்பட்டது** |
| 9) | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.TN60V 2194 வாகனத்திற்கு கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.55,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1) இன்ஜின் ஆயில், கிரௌன் ஆயில், டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்றம் செய்தல்.<br>2) நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செய்து, பேரிங் செய்தல் மற்றும் பிரேக் லைனிங் மாற்றம், வீல் அலாய்ட்மெண்ட் ஆகிய மராமத்து பணிகள்.<br>3) வாட்டர் சர்வீஸ், A/c டாப் அப் செய்தல் மற்றும் & ஜெனரல் செக்கப்<br>4) வைப்பர் & மோட்டார் -1 |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1706/2022/இ1) |
| | **தீர்மான எண். 137 அனுமதிக்கப்பட்டது** |
| 10) | இந்நகராட்சியில் பொதுமக்களுக்கு நீண்ட காலமாக நிலவி வந்த குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும்நோக்குடன் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் 2013–2014–இன்கீழ், நகராட்சிக்கென தனியாக சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு, நீரேற்று நிலையம் அமைத்து 23.09.2014 முதல் கம்பம் நகர பொதுமக்களுக்கு குறைவின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேற்படி குடிநீரேற்று நிலையத்தில் ஆற்றினில் உள்ள இரண்டு நீர் உறிஞ்சும் கிணற்றில் நான்கு 10 எச்.பி. திறன் கொண்ட மின் மோட்டார்களுக்குரிய மின்வயர் ஆற்றின் கீழ் ஜி.ஐ. குழாய்க்குள் செல்வதால், ஆற்றில் வெள்ள பெருக்கு நேரத்தில் குழாய்கள் சேதமடைந்து அதனுள் செல்லும் வயர் இணைப்பு எந்நேரமும் பழுதாகி மோட்டார் இயங்காமல் ஆகும் நிலை தற்போது உள்ளது. எனவே அதனை புதியதாக வயர் இணைப்பு ஆற்றின் மேல் உரிய பாதுகாப்புடன் அமைக்கவும், மின் இணைப்பு (Service Wire) வயரை 95sq mm LTUG |

| | |
|---|---|
| | Cable லிருந்து 185 sq mm LTUG Cable ஆக மாற்றவும், ஆற்றினுள் உள்ள நான்கு 10 எச்.பி.திறன் மின் மோட்டார் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதனை உடனடியாக அன்றைய தினமே வேறு ஒரு மோட்டார் பொருத்தி பம்பிங் செய்ய வசதியாக புதியதாக 10 எச்.பி. திறனில் மின் மோட்டார் (Stand by Motor) ஒன்று வாங்கவும் தயார் செய்த மதிப்பீடு (ஜி.எஸ்.டி உட்பட) ரூபாய்.2,30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய குடிநீர் விநியோக பணி ஆதலால் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் நிதியாண்டு குடிநீர் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண். 138 அனுமதிக்கப்பட்டது** |
| 11) | இந்நகராட்சியில் தற்போது 22.08.2022–ஆம் தேதியின்படி கீழ்கண்ட விவரப்படி தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. |

| வ.எண். | தெருமின் விளக்குகள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்குகள் | 1818 |
| 2 | 25 வாட்ஸ் ஒளிஉமிழ் விளக்குகள் | 386 |
| 3 | 30 வாட்ஸ் ஒளி உமிழ் விளக்குகள் | 320 |
| 4 | 60 வாட்ஸ் ஒளி உமிழ் விளக்குகள் | 96 |
| 5 | 150 வாட்ஸ் ஒளி உமிழ் விளக்குகள் | 41 |
| | மொத்தம் | 2660 |

| | |
|---|---|
| | மேற்கண்ட தெரு விளக்குகள் தவிர நகராட்சிக்குசொந்தமான இதர கட்டிடங்களில் உள்ள மின் விளக்குகள், குடிநீர் தேக்கங்கள்,பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள மின் விளக்குகள் ஆகியவற்றை பராமரிப்பு பணிகள் செய்ய தேவையான மின் பொருட்கள் இருப்பு மிக குறைவாக உள்ளதால் தொடர்ந்து 2022-2023- ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு செய்ய தேவையான மின் பொருட்கள் வாங்க தயார் செய்த மதிப்பீடு (ஜி.எஸ்.டி உட்பட) ரூபாய் 7,90,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய பராமரிப்பு பணி ஆதலால் மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் நிதியாண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மான எண். 139 அனுமதிக்கப்பட்டது** |
| 12) | இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020-ஆம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண்.1136/2020/இ2, நாள்.01.12.2020-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2. நாள்.22.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் |

என்பவர் தொடர்ந்து 1 மாத காலத்திற்கு 01.08.2022 முதல் 31.08.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 636 | 57240 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Fitter bed Operator) 3 நபர் | 30 x 3 = 90 | 713.70 | 64233 |
| 3 | காவலர் 12 நபர் | 30 x 12 = 360 | 385 | 138600 |
| | | | மொத்தம் | 260073 |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-ன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1136/2020/இ2)

**தீர்மான எண். 140 அனுமதிக்கப்பட்டது**

13) **இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து** 23.09.2014 **முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள** 8 **மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட** 2022-2023-**ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்த பணிக்காலம்** 31.07.2022-**இல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து** 1 **மாத காலத்திற்கு** 01.08.2022 **முதல்** 31.08.2022 **வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும்** ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.77,000/-க்கு (ரூபாய் எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 568 | 51120 |
| 2 | காவலர் 1 நபர் | 30 x 1 = 30 | 426 | 12780 |
| | | | மொத்தம் | 63900 |

**அலுவலகக்குறிப்பு** : 1) **மன்றம் அனுமதிக்கலாம்.**
2)**மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி** 2022-2023-**இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.** (**ந.க.எண்**.579/2021/**இ**2)

**தீர்மான எண். 141 அனுமதிக்கப்பட்டது**

14) கம்பம் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனம் டிராக்டர் டிசியு 9465-க்கு பேட்டரி பழுதாகிவிட்டதால் 80 ஆம்ஸ் 12 வோல்டேஜ் உள்ள புதிய பேட்டரி ஒன்று வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1) **மன்றம் அனுமதிக்கலாம்.**
2)**மேற்படி பணிக்கான செலவினத்தை** 2022-2023-**ம் ஆண்டிற்கான குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.** (**ந.க.எண்**.031/2022/**இ**2)

**தீர்மான எண். 142 அனுமதிக்கப்பட்டது**

| | |
|---|---|
| 15) | இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையினை நவீன வசதிகளுடன் மேம்பாட்டு பணிகள் செய்திட உத்திரவிடப்பட்டு தற்போது சந்தையின் வட்புறம் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதில் தென்புறமுள்ள குறுகிய இடத்திலும் மற்றும் அதனை ஒட்டிய சிறுபகுதியிலும் வாரச்சந்தை தற்போது நடைபெற்று வருகின்றது. இந்த இடம் குறுகிய இடமாக இருப்பதால் பொதுமக்கள் வந்து செல்வதில் அதிக சிரம்ம் ஏற்படுகின்றது. மேலும் கம்பம் வாரச்சந்தைக்கு கேரளாவிலிருந்து அதிகளவில் வாகனங்கள் வந்து செல்லும் நிலையில் அதற்கான பாதை மற்றும் சநதை நடைபெறுவதற்கான போதுமான இடம் இல்லை. மேலும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தகாலத்திற்குள் பணிகளை முடிக்க வேண்டியுள்ளதால் சந்தையின் தென்புறம் இடத்தினை காலி செய்து வழங்குமாறு தெரிவித்துள்ளார். இதில் வடபுறம் நடைபெறும் பணிகளுக்கான பொருட்களை வைத்திட இயலாமலும், சந்தைநடைபெறும் நாட்களில் இங்கும் மக்கள் வந்து செல்வதால் கட்டுமான பணிகளுக்கான கம்பிகள் கற்களால் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் ஏதேனும் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். எனவே வாரச்சந்தையில் தென்புறம் கட்டுமான பணிகளுக்காக அடைக்கும்பட்சம் அதனை ஒட்டிய குறுகிய இடத்தில் அனைத்து வியாபாரிகளும் கடைகள் அமைத்திட இயலாது அத்துடன் தற்போது பருவ மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில் இந்த இடம் பள்ளமாக இருப்பதால் தண்ணீர் தேங்குவதால் வாரச்சந்தைக்கு வருகைதரும் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நலன்கருதியும் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் இத்திட்டபணியினை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியது அவசியமாதலாலும், வாரச்சந்தைக்கென கம்பம் நகர்எல்லைக்குள் வேறு இடம் இல்லாத காரணத்தினாலும், பொறியாளர் அறிக்கையின்படி வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் முடிப்பதற்கு 3 மாத காலம் தேவைப்ப்டும் எனத்தெரிவித்துள்ளதை ஏற்று பொதுமக்கள் நலன் மற்றும் திட்டப்பணிகள் நடைபெறுவதற்கு ஏதுவாக 01.09.2022 முதல் 30.11.2022 வரை 3 மாதகாலத்திற்கு வாரச்சந்தை நடைபெறுவதை நிறுத்தி வைத்திட மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**: பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் பணிகள் நடைபெறுவதால் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் என்பதால் பணிகள் முடிவடையும்வரை வாரச்சந்தை நடைபெறுவதை நிறுத்தி வைக்கவும் இதுகுறித்து வாரச்சந்தை வியாபாரிகள் மற்றும் குத்தகைதாரக்கு முறையாக அறிவிப்பு அனுப்பவும். இச்சந்தைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகைத்தொகையினை நிறுத்தி வைக்கப்படும் காலத்திற்கு வஜா செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/அ2) |
| | **தீர்மான எண். 143 அனுமதிக்கப்பட்டது.** |
| 16) | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு தொடர்ந்து 7 முறை ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டும் முன்பணம் செலுத்தி பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோர யாரும் முன்வரவில்லை. இதில் தொடர்ந்து நிதியிழப்பு ஏற்படாமல் இருக்கவும், பொதுஏல உரிம்ம் வழங்குவது அவசியமாகின்றது. எனவே இந்த இனத்திற்கான குத்தகை வைப்புத்தொகையினை கீழ்கண்டவாறு மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ 300000/- னை ரூ. 200000/-ஆக மாற்றம் செய்யலாம்<br>கூடுதல் வைப்புத்தொகை ரூ. 200000/- னை ரூ. 100000/- ஆக மாற்றம் செய்யலாம். |
| | **அலுவலகக்குறிப்பு:** குத்தகைதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும் வைப்புத் தொகையானது திரும்ப குத்தகைதாரர்க்கே ஈடுசெய்வதால் இதில் நிர்ணயம் செய்யப்பட்ட குத்தகை வைப்புத்தொகைகளை மாற்றம் செய்து பொதுஏலம்/ ஒப்பந்ப்புள்ளிகள் கோரவும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுஏலம்/ ஒப்பந்ப்புள்ளிகள் கோரிதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/அ2) |
| | **தீர்மான எண். 144 அனுமதிக்கப்பட்டது** |
| 17) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் அகற்றும் லாரி எண். TN60Z 3591-ற்கு தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து மற்றும் பழுதுநீக்க பணிகளை செய்வதற்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1316/2022/எச்1,நாள்.01.08.2022-இன்படி |

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 23.08.2022 அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் | 98000/- |
| 2) | சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் | 110000/- |
| 3) | முத்து பேட்டரி ஒர்க்ஸ், கம்பம் | 120000/- |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** :**மன்றம் அனுமதிக்கலாம்**
(**ந.க.எண்**.1316/2022/**எச்**1)

**தீர்மான எண். 145 அனுமதிக்கப்பட்டது**

18) கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண் .TN.60 Y 1959ற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகளை மேற்கொள்வதற்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1317/2022/எச்1,நாள்.01.08.2022-இன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 23.08.2022 அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் | 210000/- |
| 2) | சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் | 240000/- |
| 3) | முத்து பேட்டரி ஒர்க்ஸ், கம்பம் | 230000/- |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** :**மன்றம் அனுமதிக்கலாம்**
(**ந.க.எண்**.1317/2022/**எச்**1)

**தீர்மான எண். 146 அனுமதிக்கப்பட்டது**

19) இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 60 AW 8347 எண் கொண்ட TATA ACE - வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய 04.08.2022 அன்று கோரப்பட்ட விலைப்புள்ளிக்கு கீழ்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் | 38180/- |
| 2) | சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் | 41400/- |

குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** :**மன்றம் அனுமதிக்கலாம்**
(**ந.க.எண்**.1479/2022/**எச்**1)

**தீர்மான எண். 147 அனுமதிக்கப்பட்டது**

20) கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE - வாகன எண். TN 60 AV 2496-க்கு பழுதுகளை நீக்கம் செய்ய இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1454/2022/எச்1 நாள்.01.08.2022-இன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 17.08.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் | 33800/- |
| 2) | சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் | 37400/- |
| 3) | முத்து பேட்டரி ஒர்க்ஸ், கம்பம் | 36,500/- |

மேற்கண்டவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** :**மன்றம் அனுமதிக்கலாம்**

(**ந.க.எண்**.1454/2022/**எச்**1)

**தீர்மான எண். 148 அனுமதிக்கப்பட்டது**

21) கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE - வாகன எண். TN 60 AW 8375-க்கு பழுதினை நீக்கம் செய்ய இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1272/2022/எச்1 நாள்.01.08.2022-இன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 17.08.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் | 8400/- |
| 2) | சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம் | 9500/- |
| 3) | முத்து பேட்டரி ஒர்க்ஸ், கம்பம் | 10,500/- |

மேற்கண்டவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு** :**மன்றம் அனுமதிக்கலாம்**

(**ந.க.எண்**.1272/2022/**எச்**1)

**தீர்மான எண். 149 அனுமதிக்கப்பட்டது**

22) இந்நகர்மன்ற தீர்மான எண்.113, நாள்.29.07.2022-இல், கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 17.08.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1) | <u>குடிநீர் நிதி 2022-2023</u> கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மற்றும் வார்டு எண்.20 ஆகிய இரண்டு வார்டுகளும் சந்திக்கும் பஜார் தெரு சூப்பர் ஸ்டோர் அருகில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் | 10,00,000/- | M/s. ஏ.பி. கன்ஸ்ட்ரசன்ஸ் | - | (-) 0.19 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.77 | - |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட M/s. A.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நிறுவனத்தார், கம்பம் (-) 0.19 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.579/2022/இ1)

**தீர்மான எண். 150 அனுமதிக்கப்பட்டது**

23) இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.114, நாள்.29.07.2022-இல் கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.578/2022/இ1, நாள்20.08.2022-இன்படி 17.08.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1) | <u>குடிநீர் நிதி 2022-2023</u> கம்பம் நகராட்சி வார்டு எண்.27 பசும்பொன் முத்துராமலிங்கம் தேவர் தெரு E.B அலுவலகம், நகராட்சி எல்லைக்கு அருகில் சிறிய மின்விசை பம்ப் அமைக்கும் பணி | 3,75,000/- | P. முருகன் | - | (-) 0.07 |
| | | | வி.கிருஷ்ணன் | 0.27 | - |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட P. முருகன், ஒப்பந்ததாரர், கூடலூர் (-) 0.07 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.578/2022/இ1)

| | |
|---|---|
| | **தீர்மான எண். 151 அனுமதிக்கப்பட்டது** |
| 24) | இந்நகராட்சியில் கீழ்காணும் பணிகள் செய்திட இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.133/2022/இ2 நாள்.29.07.2022-ம் கோரியதில் 17.08.2022 அன்று வரப்பெற்ற ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்). | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1) | இந்நகராட்சிக்கு சொந்தமான லோயர் கேம்ப் நீரேற்று நிலையத்திலிருந்து 18 கி.மீ தொலைவில் குடிநீர் பம்பிங் செய்து கம்பம் நகருக்கு 7.43 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது D.I Pumping பைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள Air வால்வுகள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதிதாக Air வால்வுகள் 7 எண்ணம் வாங்குதல் | 1,25,000 | P. வேல்பாண்டியன் | - 0.13 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | | 3.05 |
| 2) | இந்நகராட்சி குமுளி ரோடுஉரக்கிடங்கு கழிவு பிளாஸ்டிக்குகளை பண்டல் செய்ய பயன்படுத்தப்படும் இயந்திரத்தில் உள்ள 5 HP திறன் கொண்ட மின் மோட்டார் மற்றும் ஆங்கூர்பாளையம் ரோடு MCC மையத்தில் உள்ள 10HP மின் மோட்டார்களை ரீவைண்டிங் செய்து சாப்ட் வெல்டிங் செய்து கடைசல் பணிகள் செய்தல் பணிக்கு | 24,000 | P. வேல்பாண்டியன் | - 0.05 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | | 5.00 |

அலுவலகக்குறிப்பு : வரப்பட்ட 2 பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட விலை விகிதம் திரு.M. வேல்பாண்டியன், கம்பம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| | **தீர்மான எண். 152 அனுமதிக்கப்பட்டது** |
| 25) | கம்பம் நகராட்சி கல்வி நிதி 2022-2023-இன்கீழ் ரூ.30.00 லட்சம் மதிப்பீட்டில், வார்டு எண்.24, சின்னவாய்க்கால் தெருவில் அமைந்துள்ள தேரடி நகராட்சி ஆரம்ப பள்ளியில் புதிதாக 2 வகுப்பறைகள் கட்டும் பணிக்கு 27.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. |

மேற்கண்ட பணிக்கு 27.07.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை. நேரடியாக (Offline) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. இதன் தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (Technical Bid) 27.07.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டது.

| Sl.No | Name of the Bidder | Responsive Details | Remarks |
|---|---|---|---|
| 1 | M/s. A.P. Constructions, Cumbum | Technically Qualified | No |
| 2 | Thiru.A. Sabeer Ali, Cumbum | Technically Qualified | No |

மேற்கண்ட இரண்டு தொழில்நுட்ப பட்டியலும் திட்டப்பணிகள் மேற்கொள்ள தகுதியானதாக இருந்து காரணத்தினால், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 02.08.2022 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில் வரப்பெற்ற விலைவிகிதம் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. A.P. Constructions, Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 % அதிகம் |
| 2 | Thiru.A. Sabeer Ali, Cumbum | மதிப்பீட்டு தொகைக்கு (+) 7.23 % அதிகம் |

| | |
|---|---|
| | மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.99 சதவிகிதம் கூடுதலில் குறைவாக M/s. A.P. Constructions, Cumbum நிறுவனத்தால் விலைவிகிதம் வழங்கிய நிலையில் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் ஒப்பந்ததாரர் மூலப்பொருட்களின் விலை ஏற்றத்தினாலும் பணியாளர்களின் கூடுதல் சம்பள ஏற்றத்தினாலும் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள 4.99% சதவிகித விலை விகிதத்தினை குறைக்க இயலாது என 03.08.2022-ஆம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார்கள். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாகவும், மதிப்பீட்டை விட 4.99 சதவிகிதம் கூடுதலாக விலைவிகிதம் வழங்கியுள்ள M/s. A.P. Constructions, Cumbum ஒப்பந்தப்புள்ளியை மேற்படி திட்ட பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் கருதி ஒப்பந்த நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட வரும் கூடுதல் செலவினத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2191/2022/இ1) |
| | **தீர்மான எண். 153 அனுமதிக்கப்பட்டது** |

**ஒப்பம்/- நெ.வனிதாநெப்போலியன்**

இடம் :கம்பம் — நகர்மன்றத்தலைவர்

நாள் :26.08.2022 — கம்பம் நகராட்சி.